Registered as a Newspaper in Ceylon        விலை சதம் 10

# ஈழநாடு

மலர் 7        EELA NADU        இதழ் 160

National Tamil Daily        தேசிய தினசரி

(22-7-65)

விசுவாவசு ஆடி 7    ஏபி: அவ் பிறை 22    வியாழக்கிழமை

மில்க் வைற் நீல சோப்
விலை குறைத்தல்

தற்சமயம் சோப்புக்குரிய சில மூலப் பொருட்கள் விலைகுறைவின் காரணமாக கேசுக்கு ரூபா 1/- மேலும் விலையில் குறைத்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்

1 கட்டி சோப் விலை சதம் 20

## மீண்டும் அதே பென்ஸ்!

கொழும்பு, புதன்

பென்ஸ்கார் சுவீப்பில் முதல் பரிசுபெற்ற ஜோன் பீரிஸ் பென்ஸ் காருக்குப் பதிலாக 60,000ரூபா பெற்றுக்கொண்டதால், மீண்டும் அதே காரை, தேசிய லொத்தர் சபை பரிசாக வழங்கக்கூடும்.

செனட்டில்

# தமிழில் மசோதா!

## "வரவேற்க வேண்டிய நல்ல ஏற்பாடு" — செனட்டர் நடேசன்

கொழும்பு, புதன்

சுதந்திர இலங்கையின் சரித்திரத்தில் செனட்சபையில் முதல்தடவையாக தமிழிலும் ஒரு மசோதா நேற்று சமர்ப்பிக்கப்பட்டது. அதிலும் முக்கியமான லஞ்சஊழல் திருத்தச் சட்ட மசோதா தமிழில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்தப் புதிய ஏற்பாட்டைக் கவனித்த செனட்டர் எஸ். நடேசன் இம்மாதம் 27-ம் திகதி விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கும் மசோதா சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டுவிட்டு "இதற்குமுன் நடைமுறையிலிருந்த பழக்கத்தை விடுத்து நல்ல முறையில் ஏற்பட்டுள்ள இப்புதிய திருப்பம் வரவேற்கத் தகுந்தது" என்று கூறினார்.

வரிவிதிப்பு மசோதா சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டுமே சமர்ப்பிக்கப்பட்டிருப்பதை செனட்டர் நடேசன் குறிப்பிட்டு, நேர்வே அரசாங்கத்தினதும் இலங்கை அரசாங்கத்தினதும் சம்பிரதாய முறையை செனட்சபை முதல்வருக்குச் சுட்டிக்காட்டினார். இதர மசோதாக்களையும் இனி தமிழிலும் சமர்ப்பிக்கும்படி அவர் கேட்டுக்கொண்டார். இதற்கு சபைமுதல்வர் டாக்டர் எம். வி. பி. பீரிஸ் பதிலளிக்கையில் காலக்கிரமத்தில் அவைகளும் இதே ஒழுங்கு முறையைப் பின்பற்றும் என்றார்.

# பஸ்களின் "நோய்!"

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாவட்டம் முழுவதிலும் நல்ல முறையில் சேவை செய்யக்கூடிய அளவுக்கு பஸ்கள் இப்போது இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் பத்து மைல் தூரத்தை ஒருமுறை பிரயாணம் செய்வதற்குக் குறைந்தது இரண்டு மணித்தியாலம் நேரத்தை பஸ் நிலையத்தில் மட்டும் வீண்விரயம் செய்யவேண்டியுள்ளதே! இவ்வித தாமதத்திற்குக் காரணம் என்ன என்பதை பொதுமக்கள் அறிந்து கொள்ள முடியவில்லை.

நேற்று மாலை பஸ் நிலையத்தில் ஒரே ஜனக்கூட்டம். அநேகமாக ஒவ்வொரு பாதையிலும் பிரயாணம் செய்யும் பிரயாணிகள் பஸ்ஸுக்காகக் காத்து நின்றனர்.

யாழ்ப்பாணம் வந்ததும் வந்ததும் பஸ்களுக்கு நோய் ஏற்பட்டுவிடுகிறதா? இல்லை விடிவில் இரவுநேரத்தில் நோயா? நேற்று மாலை இரண்டு மணித்தியாலயத்தில் (4 மணிதொடக்கம் 6 மணி வரையில்) மட்டும் 15 பஸ்கள் பழுதடைந்துவிட்டனவாம் எப்படி இருக்கிறது பஸ்களின் நோய்!

# வேலை நிறுத்தம்

கொழும்பு, புதன்

அரசாங்க இலங்கா ஒன்றிலும், இரண்டு கார்ப்பரேஷன்களிலும் இன்று பல ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

பெட்ரோலியம் கார்ப்பரேஷனின் செல்லன்னாவை எண்ணெய் நிலயத்தில் கடமையாற்றும் சுமார் 900 ஊழியர்கள் இன்று காலையிலிருந்து வேலைநிறுத்தம் செய்தனர். காலையில் வேலைக்கென வந்த இவர்கள் சில நிமிடநேரத்தில் வேலைசெய்யாது வெளிநடப்புச்செய்தனர். அண்மையில் புதிதாக இயற்றப்பட்ட சம்பளவிகிதத்தை ஆட்சேபித்தே இவர்கள் வெளிநடப்புச்செய்தனர். வேலைநிறுத்தம்பற்றி வேலைநிறுத்தம்செய்யும் தொழிலாளர்களின் தொழிற்சங்கம் முன்னறிவித்தல் கொடுக்கவில்லையென கார்ப்பரேஷன் ஜெனரல்மனேஜர் தெரிவித்தார்.

துறைமுககார்ப்பரேஷனைச் சேர்ந்த 800 தொழிலாளர்கள் இன்று காலை திடீரென வேலைநிறுத்தம் செய்ததால் கொழும்புத்துறைமுகத்தில் உள்ள "டெல்வ்ற" இறங்குதுறையில் காத்துநிற்கும் ஐந்து உணவுக் கப்பல்களில் எந்தக் கப்பலிலிருந்தும் உணவுப் பொருட்கள் இறக்கப்படவில்லை.

தாங்கள் வேலைசெய்யுமிடத்தில் தகுந்த சௌகரிய வசதி சாதனங்கள் இல்லை என்ற காரணத்துக்காக, இன்று பிற்பகல் ஒரு மணிக்கு தபால் தந்தி இலாகாவின் சம்பளப் பிரிவைச்சேர்ந்த சகல உத்தியோகஸ்தர்களும் வெளிநடப்புச்செய்தனர்.

# "வீட்டுக்கு நெருப்பு வைத்ததைப் பார்த்தேன்"

## இயக்கச்சி ராணுவத்தாக்குதல் வழக்கில் சாட்சியம்

சாவகச்சேரி, புதன்

"இரண்டாம் எதிரியும், பத்தாம் எதிரியும், தீப்பற்றி எரிந்து கொண்டிருந்த எங்களுடைய மூலைவீட்டுக் கூரையிலிருந்து ஒரு ஓலையை இழுத்து மற்ற வீட்டிற்கு செருகுவதைப் பற்றைக்குள்ளிருந்து பார்த்தேன். அப்போது ஐந்தாம் எதிரி அவர்களின் பின்னால் நின்றார்" என்று இயக்கச்சி இராணுவத்தாக்குதல் வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நீதிபதி திரு. பி. ஜெ. பேர்ட்சில்வா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பொழுது சாட்சியமளித்த பி. எம். ஜோன் பொலே எதிரிகளின் வழக்கறிஞரின் விசாரணையின் போது கேட்ட கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையில் கூறினார்.

இவ்வழக்கில் இயக்கச்சி இராணுவ முகாமைச் சேர்ந்த பதினொன்று இராணுவத்தினர் மீது சட்டவிரோதமாகக் கூட்டம் கூடி குழப்பம் செய்ததாகவும், கிளியைவாசியான மரியாம்பிள்ளை பெனடிக்ற், அ. செபமாலை, அ. பத்திநாதர் ஆகியோருக்கு அடித்துக் காயம் விளைவித்ததாகவும், பிலிப்புமே சேஸ் என்பவரின் இரண்டு வீடுகளுக்கும் சி. மரியாம்பிள்ளை என்பவரின் வீட்டுக்கும் சேதம் விளைவித்ததாகவும், அ. செபமாலையின் வீட்டிகளும், உடைமைகளுக்கும் 8000 ரூபா நஷ்டமும், பி. தேதுறுப் பிள்ளையின் வீட்டிற்கும் உடமைகளுக்கும் 500 ரூபா நஷ்டமும், அ. பத்திநாதரின் காருக்கு 2000 ரூ நஷ்டமும் விளைவித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பி. எம். ஜோன் பொலே சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

"சம்பவம் நடந்த அன்று மத்தியானம் நானும் எனது தந்தையாரும், மற்றும் ஆட்களும் கடலில் மீன்பிடிக்கப் போவதற்காகத் தயார் பண்ணிக்கொண்டிருந்தோம். அப்போது 10, 15 இராணுவத்தினர் வழியில் அகப்பட்ட கிராமவாசிகளை அடித்து விரட்டிக் கொண்டு வீதிவழியே ஓடிவருவதைக் கண்டேன். எங்கள் வீட்டுக்கு கிட்ட அவர்கள் வந்ததும் என் அம்மாவையும், சகோதரர்களையும் காட்டுக்குள் ஓடி ஒழிக்குமாறு சொல்லிவிட்டு நான் மற்றவர்களுடன் கடற்கரையில் இருந்த வள்ளத்திற்கு ஓடிப்போனேன். எங்களுக்குப் பின்னால் வெகு அருகில் வந்த இராணுவத்தினர் நாங்கள் வள்ளத்தில் ஏறியவுடன் எங்களைப் பிடிக்க முடியாததால் திரும்பி எமது வீட்டுக்குப் போனார்கள். முதலாவது வீடு தீப்பற்றி எரிந்தது. அருகருகே இருந்த எங்களது இரண்டு வீடுகளும் தீப்பற்றி எரிந்து சாம்பலானதும்தான் இராணுவத்தினர் அந்த இடத்தை விட்டு ஓடிப்போனார்கள்"

எதிரிகளின் வழக்கறிஞர் சாட்சியை குறுக்கு விசாரணை செய்தார்.

வழ: 7-7-64-ல் இயக்கச்சி இராணுவ முகாமில் நடைபெற்ற ஆள் அடையாள அணிவகுப்பிற்கும் போனீரா? —ஆம்.

வழ: யாரையாவது அடையாளம் காட்டினீரா? —வீட்டை எரித்தவர்களில் மூவரை அடையாளம் காட்டினேன்.

வழ: அவர்கள் யார்?- 2-ம்,

(6-ம் பக்கம் பார்க்க)

உரும்பராய்

## கிராமசபை புதிய தலைவர்

உரும்பராய், வியாழன்

உரும்பிராய் கிராமசபைத் தலைவர் திரு சரவணமுத்து மீது 8 அங்கத்தினர்கள் கையொப்பமிட்டுக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

நேற்று முற்பகல் நடைபெற்ற இவ்விசேட கூட்டத்திற்கு வடபகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு எஸ் சி மாணிக்கவாசகர் தலைமை வகித்தார். நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதையடுத்துப் புதிய தலைவராக 6-ம் வட்டார அங்கத்தவர் திரு குலசிங்கம் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

சிங்களம் மட்டும் சட்டம் காரணமாக அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறிய திரு குலசிங்கம் உரும்பிராய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவராவார்.

# ஸ்பென்சர் கொலை வழக்கு: எதிரிக்கு மரணதண்டனை

## "தீர்ப்பு நீதியற்றது என்பதை நீதிமன்றம் உணரவேண்டும்" —எதிரி

காலி புதன்

ஸ்பென்சர் ராஜரத்தினம் கொலை வழக்கில் நீதியரசர் எல். பி. டி. சில்வா. எதிரிக்கு மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

காலி அசைஸ் நீதிமன்றத்தில், விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இவ்வழக்கில், யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த கிராமசேவகரான வீரவாகு சின்னத்தம்பி என்பவர் முன்னாள் மாவட்ட நீதிபதி ஸ்பென்சர் ராஜரத்தினத்தை கதிர்காமத்திலுள்ள ஒரு மடத்தில் கடந்த வருடம் மார்ச் மாதம் 18ம்தேதி குத்திக்கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

தொடர்ந்து எட்டு நாட்கள் நடைபெற்ற இவ்விசாரணையில் ஜூரி சபையினர் எதிரியை குற்றவாளியென ஏகமனதாக தீர்மானித்தனர்.

தீர்ப்பளிக்குமுன் நீதியரசர் எதிரியைப் பார்த்து ஏதாவது கூறவிரும்புகிறீரா என்றுகேட்டதும், எதிரி என்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு பொய் என்று கூறினார்.

எதிரியாகிய வீரவாகு சின்னத்தம்பி மேலும் கூறியதாவது:- கொலைக் குற்றச்சாட்டில் தீர்ப்பளிக்குமுன்பு மூன்றுமுக்கிய காரணங்கள் காட்டப்படவேண்டும். முதலாவதாக கொலைக்குரிய காரணமும், இரண்டாவதாக கொலைக்கு பாவிக்கப்பட்ட ஆயுதமும், மூன்றாவதாக கொலைசெய்யவேண்டிய காரணமும் காட்டப்படவேண்டும். ஆனால் இவ்வழக்கில் மூன்று காரணங்களில் ஒன்றாவது நிரூபிக்கப்படவில்லை.

முன்னேற்பாட்டின்படியோ, அல்லது சடுதியாக ஏற்பட்ட ஆத்திரத்தினாலோ இக்குற்றம் நிகழ்ந்துள்ளதா என்பதை ஜூரிசபையினரும், நீதியரசரும் தீர்மானிக்கவேண்டியது அவர்களது கடமையாகும் சட்டத்தின்படி இவைகள் இங்கு தெரிவிக்கப்படவில்லை. இக்கொலை முன்னேற்பாட்டின்படி செய்யப்பட்டிருந்தால், நான் அடையாள அட்டையையும் துணிகளையும் கொண்டுவந்திருக்கமாட்டேன். தந்தியும் அடித்திருக்கமாட்டேன்.

சடுதியாக ஏற்பட்ட ஆத்திரத்தின் காரணமாக நான் ஒருபோதும் செய்திருக்கமாட்டேன். ஏனெனில் அவர் என்னுடன் அன்பாகவும் எனக்கு ஆதரவாகவும் இருந்திருக்கினார்."

எதிரியாகிய சின்னத்தம்பி தொடர்ந்து பொலிஸார் மீது குற்றஞ்சாட்டினார், நீதிபதிக்குச் சாட்சியமளிக்க விடாமல் தன்னைப் பொலிஸார் கூண்டில் அடைத்துவைத்தனர் என்றும் தனக்கு முன்னுக்குப்பின் முரணாக பொலிஸார் தெரிவித்தனர் என்றும் கூறினார்.

(6ம் பக்கம் பார்க்க)

# ரயிலுக்கு ஒருவர் பலி

## கந்தர்மடம் அருகில் சம்பவம்

யாழ்ப்பாணம், வியா

கொட்டடியைச்சேர்ந்தவர் எனக் கூறப்படும் எஸ். சுப்பிரமணியம் (45 வயது) என்பவர் நேற்று ரயிலுடன் மோதுண்டு மரணமானார்.

காங்கேசன் துறையிலிருந்து நேற்று மத்தியானம் புறப்பட்ட "யாழ்தேவி" யாழ்ப்பாணத்தை நோக்கி வந்துகொண்டிருக்கையில் கந்தர்மடம் ரயில்கடவைக்கும் காவலர் வீதி புகையிரத கடவைக்குமிடையே இச்சம்பவம் நிகழ்ந்தது.

"மெக்கானிக்" தொழில் பார்க்கும் எஸ். சுப்பிரமணியம் என்ற இவர் ரயிலினால் மோதுண்டதால் அவரது உடல் சிதறிக்கிடக்கக் காணப்பட்டது.

இறந்தவர் சில காலமாக சுகவீனமாகவிருந்தார் என்று கூறப்படுகிறது. விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

மணிவாசகம்

அமைப்பேணி வாழ்க்கை முக்கை வெறும் வெட்டியைப் பூட்டி வைப்பது போன்றது

— முனைம்பாடியார்

ஈழநாடு

EELA NADU National Tamil
Daily. Post Box 49. Jaffna.
Grams: "EELANADU" Jaffana
Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு
ஆடி 7 — 22-7-

## மக்கள் வங்கி கடனுதவி

மக்கள் வங்கி வழங்கிவந்த சிறு கடன்களை சிறிது காலத்துக்கு நிறுத்தி வைத்துள்ளதாம். ஆனால் கைத்தொழில் மற்றும் அபிவிருத்திகளுக்கான கடனுதவி தொடர்ந்து வழங்கப்பட்டு வரும்.

தொழில் அதிபர்களுக்கும் முதலாளிகளுக்கும் உதவியளிப்பதற்காக மக்கள் வங்கி இங்கு ஸ்தாபிக்கப்படவில்லை. கோழிப்பண்ணை, ஆட்டுப் பண்ணை போன்ற வருமானம் கொடுக்கும் சிறு துறைகளை ஆரம்பிக்கவும் வீடுகளை பழுதுபார்க்கவும் வீட்டுவாடகைக்கு முற்பணம் கட்டுவது போன்றவற்றிற்கும் அருவட்டிக்குக் கடன்பட்டு அல்லல்படும் எளிய பொது மக்களை அப்பிடியிலிருந்து மீளுவதற்கு உதவியளிக்கும் நோக்கத்துடன்தான் இங்கு மக்கள்வங்கியும் அதன் கிளைகளும் ஸ்தாபிக்கப்பட்டன. வைத்தியச் செலவுகளால் ஏற்பட்ட கடனையும் குடும்பத்தில் மரணச் செலவால் ஏற்பட்ட கடனையும் அடைப்பதற்கும் மக்கள்வங்கி அளித்துவரும் சிறு கடன் உதவி பலருக்கும் ஆறுதலளித்து வந்துள்ளது.

எமது நாட்டில் தனியார் துலை ஊழியர்களுக்கோ, குமாஸ்தாக்களுக்கோ, உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கோ வைத்திய இன்ஷூரன்ஸ் திட்டமோ, மரணச் சகாய உதவியோ கிடையாது. நகரங்களில் வாழும் நடுத்தர வகுப்பு மக்களும் மற்றும் எளிய பொதுமக்களும் மரண, வைத்தியச் செலவுகளுக்கு மற்றும் குடும்பத்தில் ஏற்படும் திடீர்ச் செலவுகளுக்கும் அருவட்டிக்குப் பணம் கடன் கொடுக்கும் ஆட்களிடமோ செட்டியாரிடமோதான் தஞ்சம் புகவேண்டியுள்ளது. இல்லையேல் அதிக வட்டிக்குப் பணம் கொடுக்கும் அடைவுபிடிப்பாளரிடம்மனைவி மக்களின் நகைகளைக் கொடுத்துப் பணத்தை வாங்கி பின்னர் மீளமுடியாமலேயேபோய் விடுவதும் உண்டு. விவசாயிகள், மீனவர்கள் பலரும்கூட தங்கள் உழைப்பு முழுவதையும் வட்டி கட்டுவதிலேயே 'தண்டம்' கொடுப்பதும் உண்டு. மீனவர் ஒருவரின் படகு பழுதடைந்து விட்டால் அதைத் திருத்துவதற்குரிய பணத்தைக் கொடுப்பதற்கு வட்டிக்குப் பணம் கொடுப்பதையே தொழிலாகக் கொண்ட முதலாளிமார் தாராளமாக உதவியளிக்க முன்வருவார்கள். ஆனால் குறிப்பிட்ட ஒரு தவணைக்குள் வட்டியும் முதலும் திருப்பிச் செலுத்தத் தவறினால் படகு அவருக்கு உரிமையாகிவிடும். பின்னர் அந்த மீனவர் அதே படகில் மீன்பிடித்து அந்த முதலாளிக்கு அவற்றைக் கொடுத்து ஐந்தோ, பத்தோ கூலியாகப் பெறுவார். விவசாயிகள் பலரின் நிலையும் இதுதான்.

மக்கள் வங்கி இங்கு ஸ்தாபிக்கப்பட்டபின் அது வழங்கி வந்த சிறு கடன்கள் மூலம் விவசாயிகள், மீனவர், மற்றும் எளிய பொழுது மக்கள் பலரும் ஆறுதல் பெற்றனர். வாழ்க்கைச் செலவு உயர்வினால் கஷ்டமுறும் மக்களை மேலும் மேலும் அருவட்டிக்குப் பணம் கொடுத்து பொருளீட்டுவதையே தொழிலாகக் கொண்டவர்கள் கையில் சிக்க வைத்து உள்ளதையும் இழந்துவிட வழிவகுக்கலாகாது. வங்கி வட்டி விகித உயர்வுக் கொள்கை எதுவாக இருப்பினும் சாதாரண பொது மக்களுக்குப் பெரும் ஆறுதலாக இருக்கும் சிறு கடன் வழங்கும் திட்டத்தைச் சில நாட்களுக்குக் கூட மக்கள் வங்கி நிறுத்தக் கூடாது. மக்கள் வங்கி மக்களுக்காக இருக்கவேண்டும் என்பதை மறந்துவிடக் கூடாது.

## மாவிட்டபுரம் கோவிலில் முதல்முறையாக தெப்பத்திருவிழா

மாவிட்டபுரம், புதன்

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவிலில் முதன்முறையாக தெப்பத் திருவிழா நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. காங்கேசன் துறைக் கடலில் இத்தெப்பத் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறும்.

மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலின் வருடாந்த உற்சவம் தற்போது நடைபெற்று வருகிறது. வெள்ளிக்கிழமை கார்த்திகைத் திருவிழா வழக்கம்போல சிறப்பாக நிகழும்.

இம்மாதம் 27-ம் திகதி நடைபெறும் பஞ்சரத உற்சவ நிகழ்ச்சியை இலங்கை வானொலி அஞ்சல் செய்யும். 27-ம் திகதி காலை 7-45 மணி முதல் 10 மணிவரையும் மாலை 4 மணிமுதல் 6 மணி வரையும் நிகழ்ச்சி நேரடியாக அஞ்சல் செய்யப்படும். தீர்த்தோற்சவ நிகழ்ச்சிகள் ஒலிப்பதிவு செய்யப்பட்டு 30-ம் திகதி வெள்ளிக்கிழமையும் 1-ம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் ஒலிபரப்பப்படும்.

29ம் திகதி தெப்பத் திருவிழா காங்கேசன் துறைக் கடலில் நடைபெறும். இந்தியாவிலிருந்து முருகப் புரவலர் கவல் வியால் வரவழைக்கப்பட்ட முருகன் விக்கிரகம் வந்திறங்கிய காங்கேசன் துறைக்கும் மாவிட்டபுரத்திற்கும் உள்ள தொடர்பினை விளக்கும்வகையில் இத்தெப்பத் திருவிழா நடாத்தப்படுவதாக ஆலய ஆதீன கர்த்தா சிவஸ்ரீ சு. துரைசாமிக் குருக்கள் தெரிவித்தார்.

தெப்பத் திருவிழா வன்று மாலை முருகப் பெருமான் கசாத்துறை ஆனந்தப் பிள்ளையார் கோவிலுக்கு எழுந்தருளி பின்னர் விசேஷ அலங்காரத்துடன் காங்கேசன் துறை கடற்கரைக்குச் சென்று கடலில் சிறு தூரம் 'கங்கா தேவி அமமை வள்ளத்தில்' பவனிவருவார்.

## நாட்டிலும் நகரிலும்

நாகரீக முன்னேற்றத்தின் வேகத்தை அளந்து பார்க்க விரும்பினால் மாதத்துக்கு ஒரு முறை கொழும்பு பட்டினத்துக்கு யாத்திரை போக வேண்டும். நாகரீக வளர்ச்சிக்கு ஒரு மீட்டர் வைத்தது போல அங்கே பல வித மாற்றங்களைக் காணலாம். சிறிய தெருக்கள் பெரிய வீதிகளாகவும், பெரிய வீதிகள் சிறிய ரஸ்தாக்களாகவும், குடிசைகள் கோபுரங்களாகவு மாறியிருக்கும். முன்பு 'சுற்றியோடி' (பிரிண்ணட பெண்ட) இல்லாத இடத்தில் புதிதாக ஒரு சுற்றியோடி முளைத்திருக்கும்.

சென்ற வாரம் 'வழிப்போக்கன்' கொழும்புக்கு யாத்திரை போனபோது அங்கே நாகரீக வளர்ச்சியின் புதிய சின்னம் ஒன்றைக் கண்டான். இளம் பெண்கள் நடைபாதைகளில் பத்திரிகை விற்றுக்கொண்டிருக்கிறார்கள். இளம் பெண்கள் பத்திரிகை விற்பது நாகரீக வளர்ச்சியா அல்லது வேலையில்லாத் திண்டாட்டத்தின் சின்னமா என்று நான் மண்டையை உடைத்துக்கொள்ளத் தயாராயில்லை. வேண்டுமானால் நீங்களே உடைத்துக் கொள்ளுங்கள்!

கொழும்பு பத்திரிகைப் பையன்கள் 'தினமின லங்கா தீ ஜனதா' என்று காது குடையக் கத்துவார்கள். ஆனால் அவர்களோடு போட்டிக்கு வந்திருக்கும் பத்திரிகைப்பெண்களோ பெண்களுக்குள்ள இயற்கையான அடக்கத்துடன், ஒரு கற்றை பத்திரிகையை வைத்துக் கொண்டு மௌனமாக ஓரிடத்தில் நின்று விற்பனை செய்கிறார்கள். கட்கள் செல்லும் பையன்களும் அவர்களும் பையன்களைப் போல கத்திக்கொண்டு நடைபாதைகளில் அலைந்து திரியலாம், யார் கண்டது!

கொழும்பு பையன்கள் இன்னுமொரு பிழைக்கும் வழியை கண்டுபிடித்திருக்கிறார்கள். புகையிரத ஸ்டேஷன்களிலும் பஸ் ஸ்டான்டுகளிலும் நின்று சப்பாத்து மினுக்குதல். இது மிகவும் நேர்மையான ஒரு பிழைக்கும் வழி. முடிச்சு மாறுவதிலும், முடியாவிட்டால் பிச்சை எடுப்பதிலும் காலத்தைக் கழிக்கும் வேலையற்ற சிறு பையன்கள் இப்படி ஏதாவதொரு நல்ல வழியில் தாங்கள் ஜீவனோபாயத்தை தேடிக் கொண்டால் எவ்வளவு நல்ல காரியம்! நமது தலைநகரத்திலே சில காடைகள் அனாதைச் சிறுவர்களைச் சேர்த்து அவர்களுக்கு முடிச்சு மாறுவதிலும் பிச்சை எடுப்பதிலும் திறமையான பயிற்சி அளித்து ஒரு பெரிய 'பிஸ்னஸ்' நடத்துகிறார்கள். நாள் முடிவில் பையன்கள் எல்லோரும் தங்கள் சம்பாதிப்புகளை தலைவனிடம் கொண்டு வந்து சமர்ப்பிப்பார்கள். தலைவன் அவரவர்களுக்குரிய சம்பளத்தைக் கொடுத்து விட்டு மீதிப் பணத்தை தம்முடைய பாங்கில் சேர்த்து சில நாட்களுக்குள் பெரிய முதலாளியாகி விடுவார். இச்சிறுவர்களில் பலர் எப்பொழுதாவது பொலிஸாரிடம் அகப்பட்டு மறியலுக்கும் போய், திரும்பிவந்து வேறு வழியில்லாமல் மீண்டும் இந்தவிதமான தொழில்களில் ஈடுபட்டு கடைசியில் சமூகத்துரோகிகள் என்ற பட்டம் பெறுகிறார்கள். சப்பாத்து மினுக்குதல், பத்திரிகை விற்றல் முதலிய நேர்மையான தொழில்களில் ஈடுபட்டால் இவர்களுடைய வாழ்க்கை எவ்வளவு இனிமையாகவும் புனிதமாகவும் இருக்கும்!

* * *

சுமார் ஒருவருடத்துக்கு முன்பு ஆகாயத்தில் நட்சத்திரங்கள் போல் பறந்து திரியும் வஸ்துக்களைப் பற்றி ஒருவர் "ஈழநாடு" பத்திரிகையில் கடிதம் எழுதியிருந்தார். அவை பூமியிலிருந்து அனுப்பப்படும் உப கிரகங்களா, அல்லது சூரியனிலிருந்துவரும் உளவு கருவிகளா, அல்லது வான வெளி ஆராய்ச்சியாளர் வானத்துக்கு அனுப்பும் பலூன்களா, அல்லது விமானப் போக்கு வரத்துச் சம்பந்தமான காலநிலை அறியும் கருவிகளா என்று அவர் கேட்டிருந்தார். எவருமே தக்க பதில் கொடுக்கவில்லை.

இந்த விதமான வஸ்துகள் மறுபடியும் இலங்கையின் பல பாகங்களில் தோற்றியிருக்கின்றன. ஆர்ஜன்டினா தேசத்திலும் 'பறக்கும் தட்டுகள்' மறுபடியும் தோற்றப்பட்டுள்ளன. இவற்றின் அர்த்தம் என்ன? இவை பூமியிலுள்ள மனிதரால் அனுப்பப்படுகின்றனவா? அல்லது பூமிக்கு புறம்பான ஒரு கிரகத்திலிருந்து வருகின்றனவா? தெரியவில்லை.

அமெரிக்காவிலிருந்தும், ருஷ்யாவிலிருந்தும் செவ்வாய் கிரகத்திற்கு பரிசோதனை செய்யும் உப கிரகங்கள் இப்பொழுது அனுப்பப்பட்டு வருகின்றன. அதுபோல செவ்வாயும் எமது பூமியை ஆராய்ச்சி செய்வதற்கு இந்த வஸ்துக்களை அனுப்பிக்கொண்டிருக்கிறதா?

—வழிப்போக்கன்

## தமிழுக்கு முதலிடம்!

யாழ்ப்பாணம் வியாழன்

யாழ்ப்பாணத்தில் புதிதாக கட்டப்பட்ட அரசாங்க செயலகத்தில் தொங்கவிடப்படவிருக்கும் அதிகாரிகளின் பெயர்ப்பலகைகள் முதலில் தமிழிலும் இரண்டாவதாக சிங்களத்திலும் மூன்றாவதாக ஆங்கிலத்திலும் எழுதப்பட்டு குறிக்கப்பட்டு அதிகாரிகள் வேலைசெய்யும் இடங்களில் அமைக்கப்படலாமென தெரியவருகிறது. தற்பொழுது அரசாங்க அலுவலகங்களில் முதலில் சிங்களத்திலேயே பெயர்ப்பலகைகள் எழுதப்பட்டிருக்கின்றன.

—

கொழும்பு, புதன்

அரசாங்க இலாகாக்களில் நடைபெற்றுவருவதாகக் கூறப்படும் சதிவேலைகளை, இம்மாதம் 27-ம் தேதி அரசாங்க பாராளுமன்ற குழுக் கூட்டத்தில் அரசாங்க எம். பி.க்கள் பிரஸ்தாபிப்பார்களென எதிர்பார்க்கப்படுகிறது. இவ்விஷயத்தில் அரசாங்கம் எடுக்கும் எல்லா நடவடிக்கைகளுக்கும் பூரண ஆதரவு தெரிவிக்கும்ஒரு தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றுவார்கள்.

(5-ம் கலத் தொடர்ச்சி)

னாகவே இந்தியா திரும்பியிருப்பரெனறும் 3 அல்லது 5 வருட காலத்துக்குப் பரீட்சார்த்தமாக இந்த பிரயாணத் தடை நீக்கப்படவேண்டுமென்றும், இந்தியாவிலேயே இருக்க அவர்களுக்கு இலங்கை தூண்டுதல்கள் அளிக்கலவென்றும் கூறிவிட்டு இந்தியாவை கண்டிய விவசாயிகளிடமிருந்து உணவுத் தட்டுப்பாட்டைப் பதிக்கும் இந்தியரின் தனுதாபத்தைப் பெறக்கூடிய வகையில் பிரசாரம் செய்யவேண்டும் என்றும், இலங்கைக்கு ஆபத்து ஏற்படக்கூடிய சிக்கல்கள் ஏற்படாமல் தடுக்க இது ஒன்றுதான் வழி" என்கிறார்.

அன்பு வழியில் தீர்ப்பதும், பிரயாணத் தடையை நீக்குவதும் மிக நல்லது. அவர்களில் பெரும்பாலோரும் இலங்கையிலேயே பிறந்து இங்கேயே உழைத்து இந்த மண்ணுக்கே மங்களை அர்ப்பணித்து இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்துக்குப் பெரிதும் உதவி வருவதை மகாநாயக தேரோவுக்கு மலைநாட்டுத் தமிழ்த் தலைவர்கள் நேரிலே சென்று விளக்கி அவர்கள் படும் பலபல சங்கடங்களையும் எடுத்துச் சொல்லுவது அவசியமாகும்.

* * *

பத்தனுப் பாடமாட்டேன்
பரமனே பரமயோகி
எத்தினுற் பத்திசெய்கேன்
என்னை நீ இகழவேண்டா
முத்தனே முதல்வா தில்லை
யம்பலத்தாடுகின்ற
அத்தாவுன் னாடல் காண்பான்
அடியனேன் வந்தவாறே
— திருநாவுக்கரசர்

## ஆயாறன் ஜனத

"பென்ஸ் கார்" பரிசுபெற்ற ஜாலா பீரிஸ் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவராம். அவர் மனைவி மக்களுடனே ஸ்ரீமாவைச் சந்தித்து, தமக்குக் கிடைத்த பரிசுத் தொகையில் சரி பாதியை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நிதிக்குக் கொடுப்பதாக உறுதி கூறியதாக 'எத்த' என்ற எதிர்க்கட்சிப் பத்திரிகை தெரிவிக்கிறது.

அவர்களை ஸ்ரீமா அன்புடன் வரவேற்று, புதிய நண்பர்கள் அவரைச் சுற்றிக்கொள்வரென்றும் அவர்களைக் குறித்து எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்றும் எச்சரித்துவிட்டு, "சுதந்திரக் கட்சிக்காரருக்குப் பரிசு கிடைத்ததுபற்றிச் சந்தோஷம். நமது கட்சியைச் சேர்ந்த ஓர் ஏழைக்குப் பரிசு கிடைத்தது மனதுக்கு உற்சாகமளிக்கிறது" என்றார். முன்னாள் மந்திரியும், அந்த 'பென்ஸ்' காரை உபயோகித்தவருமான இலங்கரத்னவும் அங்கு வந்து, மிக்க கவனமாக வாழும்படி கூறி, அவர்களைப் பாராட்டினாராம். கட்சிக்காரியதரிசியும் வேறு ஒருவரும் அவர்களைப் பாராட்டினர்.

பீரிஸ் குடும்பத்தார் ஸ்ரீமாவுடனும், இலங்கரத்னவுடனும் சேர்ந்து ஸ்ரீமாவின் பங்களாவில் பிடித்துக்கொண்டிருந்த படத்தையும் அப்பத்திரிகை பிரசுரித்திருக்கிறது. தாம் உபயோகித்த கார் தமது கட்சிக்காரருக்கே பரிசாகக் கிடைத்ததுபற்றி இலங்கரத்னவுக்கு ஓரளவு ஆறுதல் அளிக்கலாம்.

கொழும்பு கோட்டைப்பகுதியிலே சில இளம் பெண்கள் தொப்பி போட்டுக்கொண்டு எதிர்க்கட்சி தினசரி பத்திரிகைகளான 'எத்த' 'ஜனதின' பத்திரிகைகளை விற்பனை செய்வது ஒரு புதிய காட்சியாகும்.

* * *

"தமிழ் மொழிக்கு வெற்றி" என்ற கொட்டை எழுத்துக்களில் 'ஜனதின' முதல் பக்கத்தில் மகுடமிட்டு ஒரு செய்தி பிரசுரித்திருக்கிறது.

மொழிவாக்குறுதிகளை உடன் நிறைவேற்றாவிடில், தங்கள் புதிய வரவு செலவுத் திட்ட விவாதத்தில், அரசாங்கத்தை ஆதரிக்க முடியாதென்று தமிழரசுக் கட்சி எச்சரித்ததாயும் இதனால் கலவரமடைந்த, பிரதமர் டட்லி சேனநாயக்கா, வேலை செய்ய சகதியற்றிருந்தும், சென்ற வாரம் மந்திரிசபைக் கூட்டத்துக்குக் கொண்டுவரப்பட்டதாயும் அதே பத்திரிகை கூறுகிறது.

அந்த ஏற்பாட்டின்படி வடக்கிலும் கிழக்கிலும் உள்ள தமிழர்கள் தமிழ் மொழியை ஆட்சி மொழியாகப் பாவிக்க பூரண அதிகாரமிருக்குமென்றும் மத்திய அரசாங்கத்துக்குத் தமிழ் மொழியில் கடிதம் எழுதலாம் என்றும், அவ்விரு மாகாணங்களிலும் தமிழ் அதிகாரிகள் அதிகம் நியமிக்கப்பட்டு, இரண்டும் பூரண சுதந்திர தமிழ் ராஜ்யமாக இருக்குமென்றும் 'எதா' கூறுகிறது.

தமிழர் தமிழில் பேசுவதும் எழுதுவதும், கூட இப்பத்திரிகைகளுக்கு அதிகமாகத் தோன்றுகிறதுபோலும்!

* * *

இலங்கை இந்தியர் பிரச்சினையைப்பற்றி மல்வத்தை மகாநாயக தேரோ வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில், இது மனிதர்களைப் பற்றிய விஷயமென்றும் புத்தர் கூறிய அன்பு வழியிலேயே இதைத் தீர்க்கவேண்டுமென்கிறார். மலைநாட்டிலுள்ள இந்தியர் "தங்கள்" தந்தை நாட்டுக்குச் செல்ல முன் இருந்த உரிமையை மீண்டும் அளித்தால் அவர்களில் பலர் அங்கேயே இருக்க விரும்பக்கூடுமென்றும் பிரயாணத்தடை இல்லாமலிருந்தால் இதுவரை பல லட்சம் இந்தியர் தாங்க

(4-ம் கலம் பார்க்க)

வியட்னும்

# காஞ விசேஷப் பிரதிநிதி ஹானேய் விஜயம்

## "யுத்தத்தை நிறுத்த சகல முயற்சிகளும் வேண்டும்"

— ரஷ்ய அதிபர்

மாஸ்கோ, ஜூலை 21

வியட்னும் யுத்தத்தை நிறுத்துவதற்கு சாத்தியமான சகல முயற்சிகளும் எடுத்துக் கொள்ளப்படவேண்டும் என ரஷ்ய ஜனுதிபதி மிக்கோயன் இங்கு விஜயம் செய்துள்ள கனேடிய தூதுக்கோஷ்டியிடம் தெரிவித்தார்.

வியட்னுமிலிருந்து ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து துருப்புக்கள் வாபஸ் பெறப்படவேண்டும் என்றும் திரு. மிக்கோயன் அந்த நாடுகளைக் கேட்டுக் கொண்டார்.

ருமேனியத் தலைநகர் புக்காரஸ்டில் பேசிய ரஷ்ய கம்யூனிஸ்ட்கட்சி முதல்வர் திரு பிரஸ்னேவ், வியட்னும் மக்களுக்கு சோவியத் யூனியனும், சோவியத் நாடுகளும் தொடர்ந்து உதவி புரியும் என்ருர்.

இதற்கிடையில் லண்டனிலுள்ள கானு ஹைகமிஷனர் வியட்னும் தலைநகர் ஹானேய்க்குப் புறப்பட்டுச் சென்றிருக்கிருர்.

வடவியட்னும் அதிபர் டாக்டர் ஹோ சிமின் கானு அதிபர் நிக்ருமாவை அல்லது அவரது விசேஷ பிரதிநிதி ஒருவரை ஹானேய்க்கு அழைத்திருந்ததைத் தொடர்ந்து ஹைகமிஷனர் அங்கு செல்கிருர்.

பிரிட்டன் தலைமையிலுள்ள காமன்வெல்த் சமாதானக் கோஷ்டியை சீனு வரவேற்காது என்றும், வேறு யாரும் தலைமை வகித்துச் சென்ருல் வரவேற்கக்கூடும் என்றும் சீனத் தலைவர் மாவோதுங்கைச் சந்தித்துவிட்டுத் திரும்பிய உகண்டா மந்திரி ஒருவர் கூறினுர்.

சைகோனுக்கு விஜயம் செய்திருந்த அமெரிக்கா பாதுகாப்பு மந்திரி திரு. மக்னமாரா, வாஷிங்டன் திரும்பினுர், சென்ற ஆண்டைவிட இப்போது வியட்னும் நிலைமை மோசமாகியிருக்கிறதென்றும், வியட்காங்கியர் அங்கு படைபலத்தைப் பெருக்கி வந்தபோதிலும், சண்டையில் பெரும் நஷ்டம் அடைந்து வருகிருர்கள் என்றும் திரு. மக்னமாரா நிருபர்களிடம் கூறினுர்.

சைகோனிலிருந்து 100 கிலோமீட்டர் தூரத்தில் கெரில்லாக்கள் நேற்று தாக்குதல் நடத்தி அரசாங்க முகாம் ஒன்றைப் பிடித்த பின், எதிர் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் பின்வாங்கியதாக அறிவிக்கப்பட்டது. 9 மணி நேரம் இச்சண்டை நடைபெற்றதாயும், பெரும் ஆட்சேதம் ஏற்பட்டதாயும் மேலும் அறிவிக்கப்பட்டது.

### போக்குவரத்தைக் கட்டுப்படுத்தும் நாய்கள்

லீப்சிக், ஜூலை 21

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் லீப்சிக் நகரில் மிருகங்களை வளர்க்கும் ஒருவருக்குச் சொந்தமான மூன்று பெரிய நாய்கள் போக்குவரத்து விதிகளைக் கற்பிக்கும் ஆசிரியர்களாகக் கடமையாற்றுவது அனைவரையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்துள்ளது.

ஹேசோ, சீசர், காரஸ் என்ற பெயர்களைக் கொண்ட இந்த மூன்று நாய்களும் கடந்த மூன்று ஆண்டுகளில் 280,000 பிள்ளைகளுக்கு வீதியில் உள்ள வட்டங்களில் எப்படிச் செல்வது, தெருக்கோடியைக் கடப்பது, ஒருதிசைப் பாதை, வீதியில் ஆபத்துக்கள் ஏற்படும் நிலையில் எப்படி நடந்துகொள்வது முதலிய விபரங்களைக் கற்றுக்கொடுத்துள்ளன. இந்த நாய்களிடம் பிள்ளைகள் காட்டும் அன்பையும் உடபோகித்து ரஸ்தா விதிகளை அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கின்றனர். வீதி விபத்துகளைப் பற்றியும் எச்சரிக்கைசெய்கின்றனர்.

### காமராஜ் ஜோதி

சென்னை, ஜூலை 21

காங்கிரஸ் அக்ராசனர் திரு. காமராஜின் 63-வது பிறந்தநாளையொட்டி, காமராஜ் ஜோதி சென்னையில் ஏற்றப்படும். 63 மாணவர்கள் முறைபோட்டுக் கொண்டு பெங்களூருக்கு இந்த ஜோதியை ஏந்திச் சென்று அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டத்திற்கு முன் காமராஜிடம் சமர்ப்பிப்பார்கள். சத்திய மூர்த்தி பவனத்தில் சபாநாயகர் திரு. செல்லபாண்டியன் காமராஜ் ஜோதியை வருகிற 28-ம் திகதி ஏற்றிவைப்பார்.

### பொதுக்கூட்டத்தில் வெடிகுண்டு

சைகோன், ஜூலை 21

சைகோனிலுள்ள பெரிய தொரு விளையாட்டரங்கில் இன்று மாபெரும் கூட்டம் ஒன்று நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. இக்கூட்டம் ஆரம்பமாவதற்கு சில நிமிடநேரத்துக்கு முன்னதாக இங்கு வெடிகுண்டு ஒன்றை பொலிசார் கண்டெடுத்தனர். இக்குண்டு வெடிப்பதற்கு சில நிமிடங்களே இருந்ததென்று கூறப்பட்டது. இதுசம்பந்தமாக ஒருவரை பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

இக் கூட்டத்துக்கு அமெரிக்க தூதர் ஜெனரல் டெயிலர் மற்றும் தென்வியட்னும் அரசாங்க உயர்அதிகாரிகளும் கலந்துகொள்ளவிருந்தனர். இருந்தபொழுதிலும் கூட்டம் சமுகமாக நடைபெற்றதென்றும் வடவியட்னுமுக்கு எதிரான நடவடிக்கைகள் குறித்து இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### வவனியாவுக்கு தொழில்மந்திரி விஜயம்

வவனியா, செவ்வாய்

தொழில், வேலைவாய்ப்பு, வீடமைப்பு மந்திரி ஜனப் எம். எச். முகமது வரும் வெள்ளிக்கிழமை வவனியாவுக்கு விஜயம் செய்யவிருக்கிருர்.

### முன்னுள் மந்திரி காலமானர்

கல்கத்தா, ஜூலை 21

மேற்கு வங்க அரசாங்கத்தில் முன்பு தொழில் மந்திரியாய் இருந்த திரு. அப்துல் சத்தார் இங்கு காலமானுர். அவருக்கு வயது 54.

# டில்லியில் முருகன், சுந்தரேசர், மீனுட்சி ஆலயங்கள்

## திருப்பணிக்கு தமிழகக்கற்கள் செல்கின்றன

புதுடில்லி, ஜூலை 21

பாரதத் தலைநகர் புதுடில்லியில் மயில்கள் நிறைந்த ஒரு சிறு குன்றில் முருகனுக்குக் கோயில் எழுப்ப ஸ்ரீ சுவாமிநாத சுவாமிசேவா சமாஜத்தார் திட்டமிட்டிருக்கிருர்கள், ராமகிருஷ்ணபுரம் அருகில் காலனியில் உத்திர சுவாமிமலை என்று பெயரிடப்பட்ட இக்குன்றில் ஸ்ரீ ஞானஸ்கந்தனின் கோயிலை சோழர் பாணியிலும் ஸ்ரீ சுந்தரேசுவரர் கோயிலை பல்லவர் சிற்ப முறையிலும், ஸ்ரீ மீனுட்சி கோயிலை பாண்டியர் கலைமுறையிலும் அமைக்க ஏற்பாடாகி உள்ளது.

தமிழின் தொன்மையான கலாச்சாரம் விளங்க கோயில் முழுதும் கருங்கல்லால் கட்டப்பட விருக்கிறது. வடநாட்டவரும், டில்லிவாழும் அயல்நாட்டவரும் தமிழ்க் கலாச்சாரத்தைக் காணவேண்டும் என்னும் நோக்கில் சென்னை முதல் மந்திரி திரு பக்தவத்சலத்தையும், ஸ்ரீ ஏ. வி. அழகேசனையும் போஷகராகக் கொண்டு சமாஜத்தார் இம் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர், மகாபலிபுரம் சென்னை அரசாங்க சிற்பக் கல்லூரித் தலைவர் ஸ்ரீ கணபதிஸ்தபதி கோயில் பிளான்களைத் தயாரித்துள்ளார்.

இங்கு திருமுறைகள் ஓதுவதற்காக திருப்பனந்தாள் காசி மடத்து அதிபர் ரூ. 1,10,000 பெறுமான நிலவருமானத்தைப் பயன்படுத்த இரு சாஸனங்கள் எழுதிவைத்துள்ளார், ஸ்ரீ காமகோடி ஸ்ரீ சிருங்கேரி ஆச்சாரியாள் ஆசியைப் பெற்றுள்ள இத்திருப்பணிக்கு, தமிழ்நாட்டிலிருந்து கற்கள் செல்கின்றன. நுண்ணிய சிற்ப வேலைப்பாடுகளுக்குப் பேர்போன கற்கள் செங்கற்பட்டு ஜில்லா, வாலாஜாபாத்துக் கருகேபட்டு மலைக்குப்பகத்தில் கிடைக்கின்றன. ஏற்கனவே இதற்கான முகூர்த்தம் நடைபெற்றது, இங்கிருந்து ரயில் மூலம் கற்கள் டில்லி செல்கின்றன.

### பிரோஸ்பூரில் தத் சடலம்

பிரோஸ்பூர், ஜூலை 21

காலஞ்சென்ற புரட்சி வீரர் ஸ்ரீ பட்டுகேஸ்வர் தத்தின் பிரேதம் இன்று காலை டஞ்சாபிலுள்ள பிரோஸ்பூர் ரயில்வே நிலையத்தை அடைந்த போது முதன் மந்திரி திரு. ராமகிஷனும், இதர மந்திரிகளும் அதைப் பெற்றுக் கொண்டனர்.

கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் "பி. கே. தத் அமர்ரஹோ" எனக் கோஷமிட்டவண்ணம் இருந்தனர். பஞ்சாப் பொலிஸ்படையினர் பழைய புரட்சி வீரருக்கு அணிவகுப்பு மரியாதை நடத்தினர். சடலம் பொதுமக்கள் தரிசனத்திற்காக 2 மணிநேரம் வைக்கப்பட்டிருந்தது.

வழிநெடுகப் பல ரயில் நிலையங்களிலும் ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்து பிரேதத்தைத்தரிசித்தனர்.

### காமன்வெல்த் அலுவலகம் ஆண்டு ஒன்றுக்கு 150000 பவுன் செலவு

லண்டன், ஜூலை 21

காமன்வெல்த் அலுவலகத்தை நிறுவுவதற்கு 25000 பவுன்களும், நிர்வாகத்திற்கான ஆண்டு ஒன்றுக்கு 150000 பவுன்களும் தேவைப்படும் என காமன்வெல்த் உறவு மந்திரி திரு. பொட்டம்லி காமன்ஸ் சபையில் தெரிவித்தார். இச்செலவைப் பங்கிட்டுக்கொள்ள காமன்வெல்த் அரசுகள் இசைந்திருக்கின்றன என்றும், பிரிட்டன் 30 சதவிகிதத்தை ஏற்றுக்கொள்ளும் என்றும் அவர் கூறினுர்.

# பிரிட்டனில் மரணதண்டனை ஒழிக்கப்படுகிறது

லண்டன், ஜூலை 21

மரணதண்டனை ஒழிப்பு மசோதாவை நேற்று பிரிட்டிஷ் பிரபுக்கள்சபை அங்கீகரித்தது. மசோதாவுக்குச் சாதகமாக 204 வாக்குகளும், பாதகமாக 104 வாக்குகளும் கிடைத்தன. ஏற்கனவே இந்த மசோதா காமன்ஸ் சபையில் 102 அதிகப்படி வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

முன்பு 1948-ம் ஆண்டிலும், 1956-ம் ஆண்டிலும் மரண தண்டனையை ஒழிக்கும் மசோதாவை காமன்ஸ் சபை அங்கீகரித்த போதிலும், பிரபுக்கள்சபை அங்கீகரிக்கவில்லை. இப்போது பிரபுக்கள் சபையும் அங்கீகரித்துவிட்டதைத் தொடர்ந்து வருகிற அக்டோபர் மாதம் முதல் தண்டனை ஒழிப்பு அமுலுக்கு வரும்.

### ஆராய்ச்சிவேலைகள் தடைபடுகிறது

பம்பலப்பிட்டி, புதன்

தேவையான சாதனங்கள் இல்லாத காரணத்தால், நாவின்னவிலுள்ள ஆயுர்வேத ஆராய்ச்சி கூடத்தில் வேலைகள் தடைப்படுவதாக, ஆயுர்வேத ஆராய்ச்சி சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

### கோல்ட்பர்க்: ஐ. நா. பிரதிநிதி

வாஷிங்டன், ஜூலை 21

காலஞ்சென்ற திரு. அட்லாய் ஸ்டீவன்ஸனுக்குப் பதிலாக, சுப்ரீம் கோர்ட் நீதியரசர் திரு. ஆர்தர் கோல்ட்பர்க்கை, ஐ. நா. வில் அமெரிக்க தலைமைப் பிரதிநிதியாக ஜனுதிபதி ஜோன்ஸன் நியமித்திருக்கிருர். திரு கோல்ட்பர்க் முன்னுள் ஜனுதிபதி கென்னடிக்குச் சார்பானவர் எனக் கூறப்படுகிறது.

### ரூ. 19 கோடி திட்டம் ஒருவர் கட்டித்தருகிருர்

சென்னை, ஜூலை 21

தூத்துக்குடியில் ரூ 19 கோடி செலவில் அனல் மின்சார நிலையம் ஒன்றை ஏற்படுத்தித்தர ஸ்ரீ தரம் தேஜா என்ற தொழிலதிபர் முன் வந்திருக்கிருர்.

### கிரேக்க மந்திரிகள்

ஏதன்ஸ், ஜூலை 21

புதிய கிரேக்க அரசாங்கத்தின் 20 மந்திரிகள் இன்று விஸ்வாசப்பிரமாணம் எடுத்துக் கொண்டனர்,

### மலாவி குடியரசாகும்

லண்டன், ஜூலை 21

அடுத்த ஆண்டு ஜூலை 6-ம் திகதி மலாவி, காமன்வெல்த்தில் ஒரு குடியரசாகும் என பிரதமர் பண்டா அறிவித்தார். அன்று மலாவியின் 2-வது சுதந்திரதினமாகும்.

### ராஜினுமா

ஸ்ரீநகர், ஜூலை 21

காஷ்மீர் வாக்கெடுப்பு முன்னணியின் காரியதரிசி பதவியிலிருந்து ராஜினுமா செய்துவிட்டார் என அறிவிக்கப்பட்டது.

### விமான விபத்து இருவர் பலி

லிவர்பூல், ஜூலை 21

இங்கு ஏற்பட்ட விமான விபத்து காரணமாக இருவர் கொல்லப்பட்டனர்.

### வெள்ளத்துக்கு 5 பேர் பலி

புதுடில்லி, ஜூலை 21

திட்ருகரில் எல்லா நதிகளும் வெள்ளப் பெருக்கெடுத்ததின்காரணமாக 5 பேர்மாண்டனர் 50 பள்ளிக்கூடங்கள் அழிந்தன, பம்பாய் பூனு ஆகியநகரங்களில் பெருமழைபெய்ததால் ரயில், இதர வாகனப் போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டன.

### பூட்டோவின் பேச்சு

புதுடில்லி, ஜூலை 21

பாரத—பாகிஸ்தான் எல்லை நெடுகிலும் பதற்றத்தைத்தணிக்க நான் முயற்சி செய்கையில் பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரியின் பேச்சு இதை சீரகுலைப்பதாய் இருக்கிறதென்று ஓர் அதிகாரி கூறினுர்,

திரு சாஸ்திரியின் போர் நிறுத்த ஒப்பந்தம் ஒரு மோசடி என திரு பூட்டோ வருணித்தது பற்றி அவர் கண்டனம் தெரிவித்தார்.

### அமெரிக்க உதவி இரட்டிப்பு

புதுடில்லி, ஜூலை 21

4-ம் ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தியாவுக்கான அமெரிக்க பொருளாதார உதவி இரட்டிப்பாக்கப்படுமென்றும் இது சம்பந்தமாக இவ்வாரம் பேச்சுவார்த்தைகள் நடைபெற விருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

### விமானநிலையம் விஸ்தரிப்பு

திருவனந்தபுரம், ஜூலை 21

திருவனந்தபுரம் விமானநிலையத்தை விஸ்தரிக்க ரூ. 38 லட்சத்திற்குமேல் செலவிடப்படுகிறது, இங்கிருந்து கொழும்பு பம்பாய் ஆகிய நகரங்களுக்கு வைகவுண்ட் விமான சேவையை நடத்துவதுபற்றி ஆலோசிக்கப்பட்டு வருவதாயும் கூறப்படுகிறது.

### 'விமானத்தை திருப்பித்தருக'

புதுடில்லி, ஜூலை 21

சமீபத்தில் பாகிஸ்தானில் இறங்கிய இந்திய விமானத்தையும், விமானியையும் திருப்பித் தரும்படி இந்தியா மீண்டும் கேட்டிருக்கிறது.

### டில்லியில் மிஸ்ஸாபெய்க்

புதுடில்லி, ஜூலை 21

உதகமண்டலத்தில் சிகிச்சை பெற்றுவந்த ஷேக் அப்துல்லாவின் சகாவான மிர்ஸா அப்ஸல் பெய்க் வைத்திய பரிசோதனைக்காக புதுடில்லிக்கும் கொண்டுவரப்பட்டிருக்கிருர்.

### பூட்டோ

கராச்சி, ஜூலை 21

பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி திரு. பூட்டோ அங்காராவுக்குப் புறப்பட்டுச் சென்றிருக்கிருர்.

### நடமாடும் பொருட்காட்சி

பாக்தாத், ஜூலை 21

ஈராக் ஒரு நடமாடும் பொருட்காட்சியை நடத்துகிறது. இப்பொருட்காட்சி ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு உட்பட எட்டு ஐரோப்பிய நாடுகளில் நடத்தப்படும். ஈராக்கில் நவீன கலை வளர்ச்சியை இப்பொருட்காட்சி எடுத்துக்காட்டும். 32 கலைஞர்களால் தீட்டப்பட்ட 91 சித்திரங்களும் இப்பொருட்காட்சியில் இடம்பெறும்.

மருதமடு

# நீர்ப்பாசனத் திட்டம் புனருத்தாரணம் செய்யப்படும்

## மந்திரி சில்வா நடவடிக்கை

வவுனியா, புதன்

மருதமடு நீர்ப்பாசன திட்டம் புனருத்தாரணம் செய்யப்படுமென்றும் 1,500 ஏக்கர் மானாவாரி நிலத்திற்கு நீர்ப்பாசன வசதிகளும் செய்து கொடுக்கப்படுமென்றும் காணி, நீர்ப்பாசன, மின்சார மந்திரி திரு. சி. பி. டி. சில்வா வவுனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரத்துக்கு உறுதியளித்துள்ளார்.

புதுக்குடியிருப்புக்கு மந்திரி சில்வா விஜயம் செய்திருந்தபொழுது, வவுனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் தலைமையில் வரவேற்பளிக்கப்பட்டது. வவுனியா குடியேற்றத் திட்டங்கள் குறித்தும் மற்றும் பல்வேறு விஷயங்கள் குறித்தும் மந்திரி சில்வாவுடன் பேச்சுக்கள் நடத்திய திரு. ரி. சிவசிதம்பரம் சில கோரிக்கைகளையும் சமர்ப்பித்திருந்தார். இக்கோரிக்கைகளை மந்திரி ஏற்றுக்கொண்டார்.

ஆனந்தபுரம் மேட்டுநில குடியேற்றத்திலுள்ள 150 குடியேற்றவாசிகளுக்கு இடைகண்டு அல்லது உடையார்கட்டு நீர்ப்பாசன திட்டத்தின்கீழ் ஒவ்வொருவருக்கும் விவசாயத்துக்கான மூன்று ஏக்கர் காணி கொடுக்கப்படுமென்றும் இது குறித்து நடவடிக்கை எடுப்பதாகவும் மந்திரி சில்வா வவுனியா எம். பிக்கு உறுதியளித்துள்ளார்.

வவுனியாத் தொகுதியில் சட்டவிரோதமாக காடு வெட்டுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்றும் ஆனால் காணிக்கச்சேரிகள் நடைபெறுமல் இவர்கள் தாசனாகவே வெட்டியிருந்தால் காணிக்கச்சேரி நடைபெறாததன் காரணத்தை அறிந்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் காடுவெட்டித் திருத்துபவர்கள், முறையாக நடந்திருந்தால் அவர்களுக்கு அக்காணிகளைத் திருத்திக் கொடுக்கவேண்டுமென்றும் திரு. சிவசிதம்பரம் மந்திரியைக் கோரியிருந்தார்.

இதக்கு மந்திரி தாம் இது குறித்து அரசாங்க அதிபருடன் கலந்து பேசி இதுசம்பந்தமாக விசாரணை நடத்துமாறு உத்தரவிடுவதாகவும் உறுதி கூறினர்.

## தொழிலாளர்கள் சங்க நிர்வாகிகள்

சாவகச்சேரி, புதன்

அகில இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்க புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் வி. சரவணமுத்து, உபதலைவர் எம். திருநாவுக்கரசு, செயலாளர் கே. சிவகுரு, உபசெயலாளர் ஏ. சென்நீல்வரன், தனாதிகாரி கே. கண்ணுத்துரை, உப தனாதிகாரி கே. பொன்னம்பலம். 5 பேர் கொண்ட ஒரு நிர்வாகக் குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

## நாகாலாந்துக்கு 40 கோடி

புதுடில்லி, ஜூலை 21

4-ம் திட்டத்தில் நாகலாந்து அபிவிருத்திக்காக 40 கோடி ரூபாய் செலவிடப்படுமென அறிவிக்கப்பட்டது.

## புதிய சமாதான நீதவான்



யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. சுப்பிரமணியம் கனகசபை யாழ்ப்பாண மாவட்டத்திற்கு ஓர் சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் யாழ்ப்பாண ஐக்கிய வாபாரிதிச்சகத்தின் மனேஜரும் சிறுப்பகுமாவார்.

திரு. கனகசபை, சைவப் பரிபாலன சபையின் ஆட்சிக்குழுவின் ஒரு அங்கத்தினராக இருந்து கடந்த முப்பது ஆண்டுகளாக சேவை புரிந்து வருகிறார். இளவாலையை தனது பிறப்பிடமாகக் கொண்டிருந்தபோதிலும் பாகுபாடின்றி தமிழ் கலைக்கும், சைவசமயத்திற்கும் சிறந்த சமூகத் தொண்டாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் கோவில்களுக்கும் பல தர்ம ஸ்தாபனங்களுக்கும் நிதி உதவி அளித்துள்ளார்.

## கட்டிடம் இடிந்து நால்வர் பலி

கராச்சி, ஜூலை 2

கராச்சியில் ஒரு கட்டிடம் இடிந்து விழுந்ததின் காரணமாக நால்வர் கொல்லப்பட்டனர். 5 பேர் காயமடைந்தனர்.

## "பிரச்னைக்கு தீர்வுகாண வழி"

வவுனியா, புதன்

'சென்ற மார்ச் மாதம் 24-ம் திகதியன்று சிங்கள மக்களினதும் தமிழ்மக்களினதும் விசுவாசத்தையும் நம்பிக்கையையும் பெற்றுள்ள யு.என்.பி தலைவர் திரு. டட்லி சேனநாயகா தலைமையில் தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து எமது நாட்டை மிகவும் சுழப்பிவந்த மொழிப்பிரச்னைக்கு ஒரு தீர்வு காணும்வழி பிறந்துள்ளது' இவ்வாறு ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வம் வவுனியா பட்டினசபைத் திறந்தவெளியரங்கில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றிதெரிவித்துப்பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. திருச்செல்வம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

இலங்கையிலுள்ள சிங்களவர் தமிழர், இஸ்லாமியர் ஆகிய சமூகங்களுக்கிடையிலும் நேச உறவையும் சமதானத்தையும் நிலைபெறச் செய்ய தேசியஅரசாங்கம் அத்திவாரமிட்டுள்ளது.


### வட்டமேசை பிரச்னையைத் தீர்க்காது

வட்டமேசை கூட்டி மொழிப்பிரச்னைக்குத் தீர்வுகாணலாமென்பது சத்தியமாகாத ஒன்று. வட்டமேசை கூட்டுவதால் எவ்வித பலனும் ஏற்படுமென எதிர்பார்க்க முடியாது. திருமதி பண்டாரநாயகாவின் கீழுள்ள பழுத்த வகுப்புவாதிகளையும் இவ்விதரீதியிலுள்ள இடதுசாரிகளையும் சேர்த்து வட்டமேசை மகாநாடு நடத்துவதால் பாஷைப் பிரச்னைக்கு தீர்வு கண்டுவிடமுடியாது.

திரு எஸ். ரத்தினசேகரசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த வரவேற்புக் கூட்டத்தில் வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கம், பருத்தித்துறை எம். பி. திரு. துரைரத்தினம், திருக்கோணமலை எம். பி. மாணிக்கவாசகர், திருமதி அமிர்தலிங்கம் ஆகியோர் பேசினர்.


# குடும்பத்தினர் ஏச்சுக்கு ஆளானேன்!

நானேதான் வேலையைப் போக்கிக்
கொண்டேன் என்று குடும்பத்தினர்
என் மீது குற்றம் சாட்டினர்.
சோர்வுப் பிணியும், களைப்பும்
மேலிட்ட நான் வேலை
இழப்பை எப்படித்
தடுத்திருக்க முடியும்...



ஹார்லிக்ஸ் பாவிக்கும்படி
என் மனைவி கூறினுள்.
இழந்த சக்தியையும்
உற்சாகத்தையும்
பெற அது ஆகச்
சிறந்தது என்று
அவள் சொன்னுள்.






அவள் கூறியது
சரியே! சில
வாரங்களுக்குள்
ளாகவே களைப்பும்
சோர்வுப் பிணியும்
நீங்கி தெம்பும் உற்சாகமும்
கூடின. புதிய வேலைக்கு
ஆயத்தமாகச் சென்றேன்!




உணவில் போஷாக்குச்
சத்து குறைந்து அதனால்
உடலில் பலஹீனம் ஏற்
படும் பொழுது டாக்டர்கள்
ஹார்லிக்ஸ் பருகும்படி
சிபார்சு செய்கிறார்கள்.
ஆடைச்சத்து மிகுந்த
பசும் பாலும், கோதுமை
மாவு மற்றும் பார்லி
மால்ட் இவற்றின்
போஷாக்குச் சத்துக்களும்
சேர்ந்ததுதான் ஹார்லிக்ஸ்.
ஹார்லிக்ஸ் பருகுவதற்கு
ருசியானது— தவருமல்
பயனளிப்பது!

# ஹார்லிக்ஸ் அதிக சக்தி அளிக்கிறது!

IWT.HL.2528

# விளம்பரம்

## சிவபாதசுந்தரனார் நினைவு தினம்

டி. பெரியாரின் நினைவு தினம் 2-8-65 திங்கட்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். விழாவை சிறப்பாக நடத்துவதற்கு உதவுபுரிவதுடன், சமுகமளிப்பவர்கள் அறிவிக்கவும்.

தி. கணபதிப்பிள்ளை,
அ. சின்னையா,
இணைச்செயலாளர்.
சுழிபுரம். 471

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

**வியாழன் 22-7-65**

(செய்திகள் காலை 7-15 பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 காதாஞ்சலி, 6-50 கைசுத்திந்தனை, 6-55 இஸ்லாமியசுறசிந்தனை, 7-00 திதிப்பாடல்கள், 7-30 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 சிறுவர் கழகம், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 சைவகுப்பு, 7-00 பேச்சு, 7-15 பாட்டு — பகவதி கிருஷ்ணசாமி, 7-45 நாடகம், 8-00 ஒலிபிக்கிழ்ச்சி, 9-15 மெல்லிசை வாத்தியம், 9-30 நேயர்விருப்பம்.


**REGAL - JAFFNA**
**NOW SHOWING**
Edmund Purdom
in
LAST OF THE VIKINGS
(Cinemascope-Eastmancolor)



### மகத்தான 3வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) மொடேர்ன் (பதுளை)
விஜயா (மட்டக்களப்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜிதா (ஹட்டன்)

என். டி, ராமராவ், அஞ்சலிதேவி, ஜெமினி கணேசன். எம். ஆர். ராதா, மாஸ்டர் முரளி, பேபி உமா, நாகையா மற்றும் பலர் நடித்த




# லவகுசா

(முழுநீள கலர்ப்படம்)

உலகம் போற்றிப் புகழும் இராமாயண காவியத்தின் தித்திக்கும் ஒரு பொன்னேடு—லவகுசா—
படித்தவர்கள் பலகோடி! கேட்டவர்கள் பலகோடி!
இதோ சினிமாஸ்திரைகளில் பார்த்து மகிழுங்கள்!


மீசாலை

# வீரசிங்கம் வித்தியாசாலை விளையாட்டுப் போட்டி முடிவுகள்

மீசாலை, புதன்

'இப்பாடசாலை மாணவர்கள் கல்வியில் மாத்திரமல்ல விளையாட்டுத்துறையிலும் முன்னணியில் நிற்கிறார்களென்பதைக் காண, நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். விளையாட்டுப் போட்டிகளினால் கட்டுப்பாடு ஒழுங்கு, பொறுமை, திறமை நற்பண்புகள் மாணவர்களிடையே உருவாகும் என்று மீசாலை வீரசிங்கம் வித்தியாசாலை வருடாந்த விளையாட்டுப்போட்டியை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் தென்மராட்சிப் பகுதி காரியாதிகாரி திரு எஸ். சித பரப்பிள்ளை கூறினார்.

மாணவர்கள் சேரன், சோழன், பாண்டியன் என மூன்று பிரிவுகளாகப் பிரிந்து விளையாட்டில் கலந்து கொண்டனர். ஈற்றில் சோழன் இல்லம், முதலாவதாகவும் பாண்டியன் இல்லம் இரண்டாவதாகவும், சேரன் இல்லம் மூன்றாவதாகவும் இடம் பெற்றன. வெற்றிபெற்றமாணவர்களுக்கு பாடசாலைப் பரிசோதகர் திரு கனகசபாபதி பரிசில்கள் வழங்கினர்

வெற்றி பெற்ற (சாம்பியன்கள்) மாணவர்கள்விபரம்:-

மேல் பிரிவு ஆண் சே. கனகலிங்கம், மேல் பிரிவு பெண் பொ. கேஸ்வரி, மத்திய பிரிவு ஆண் இ. கல்லைநாதன், கீ. இ. சேந்திரன், மத்திய பிரிவு பெண் பொ. லீலாவதி, கீழ் பிரிவு ஆண் வே துரைராசசிங்கம், கீழ் பிரிவு பெண் செ. கமலா தேவி.

விளையாட்டுப் போட்டி முடிவில் பாடசாலைத் தலைமையாசிரியர் திரு மு சின்னத்தம்பி முன்னைய காலங்களிலும் பார்க்க இம்முறை மிகவும் சிறப்பாக நடைபெறுவதற்கு உதவியாக இருந்த மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் யாவர்க்கும் தனது நன்றியைத் தெரிவிப்பதாகக் கூறினர்.

# வேம்படி வெற்றி

## பெண்கள் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், வியா.

பெண்கள் கல்லூரிகளுக்கிடையே இங்கு நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் வேம்படி மகளிர் கல்லூரி 179 புள்ளிகளைப்பெற்று 'சாம்பியன்' வெற்றிக் கிண்ணத்தைச் சுவிகரித்துள்ளது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்தவாரம் நடைபெற்ற இப்போட்டிகளில் பதினைந்து மகளிர் கல்லூரிகள் கலந்துகொண்டன.

வீரமணிகளாக கீழ்ப் பிரிவில் செல்வி எஸ். நடராசாவும் (டிறிபேக் கல்லூரி) மத்திய பிரிவில் செல்வி எஸ். இரத்தினசிங்கமும் (வேம்படி கல்லூரி) மேற்பிரிவில் மீரா இராஜசிங்கம் (சண்டிக்குளி) சுதந்திராதேவி (வட இந்து) யும் தெரிவு செய்யப்பட்டு சாம்பியன் கிண்ணங்களைப் பெற்றுக்கொண்டனர்.

### சில முடிவுகள் வருமாறு

### கீழ்ப்பிரிவு

நீளம் பாய்தல்- பாலசுப்பிரமணியம் (வேம்படி), சரோஜினி (வட இந்து). ஜெயந்தினி (யாழ் கல்லூரி)

உயரப்பாய்தல்- நடராசா (டிறிபேக்), திலீனர் (வேம்படி), நடராசா (சண்டிக்குளி)

100 மீட்டர்- நடராசா (டிறிபேக). குமாரசாமி (வேம்படி). முடியப்பாபிள்ளை (உடுவில்)

80 மீட்டர் தடையோட்டம்- போல்பிள்ளை (வேம்படி), பரமநாதன் (சண்டிக்குளி). சிவகுரு (வேம்படி)

50 யார் கயிறடித்தல்- விஜயராணி (கனகரத்தினம் ம. ம. வி.), சுதந்திராதேவி (மானிப்பாய்), சிறிதேவி (மானிப்பாய்)

150 யார்- குமாரசாமி (வேம்படி). முடியப்பாபிள்ளை (உடுவில்). நடராசா (சண்டிக்குளி)

4X120 மீட்டர் அஞ்சல் ஓட்டம்- சண்டிக்குளி, வேம்படி, உடுவில்.

### மத்திய பிரிவு

உயரப்பாய்தல்- யோகஸ்வாமி (மானிப்பாய் மகளிர்) பெரியதம்பி (வேம்படி) வைத்தியலிங்கம் (மெதடிஸ்ற்)

குண்டெறிதல்- ஞானரத்தினமலர் (நடேஸ்வராக் கல்லூரி), ஜெயரத்தினம் (உடுவில்) பெரியதம்பி (வேம்படி)

நீளப்பாய்தல்- பத்மநாபன் (வேம்படி) சின்னத்தம்பி(மெதடிஸ்ற்), மங்களேஸ்வரி (சாவ. இந்து)

பரிதிவட்டம் எறிதல்- கணேசன் (வேம்படி), சந்திரா (நடேஸ்வரா), இராஜலட்சுமி (மகாஜனா)

100 மீட்டர்- இரத்தினசிங்கம் (வேம்படி), சிவம் (வேம்படி). சின்னத்தம்பி (மெதடிஸ்ற்).

150 யார் இரத்தினசிங்கம் (வேம்படி), சிவம் (வேம்படி) மங்களேஸ்வரி (சாவ. இந்து).

80 மீட்டர் தடையோட்டம். சபாரத்தினம்(உடுவில்) செபஸ்தியாம்பிள்ளை (சண்டிக்குளி) இராமலிங்கம் (மெதடிஸ்ற்)

75 யார் கயிறடித்தல்- ரவிச்சந்திரிகா (நடேஸ்வரா), சந்திரகுமாரி (யாழ். இந்து மகளிர்). சேதுசிகாமணி (உடுவில்)

4X100 மீட்டர் அஞ்சல் ஓட்டம்- வேம்படி, சண்டிக்குளி, மானிப்பாய் இந்து மகளிர்.

### மேற்பிரிவு

நீளம்பாய்தல்- சுதந்திராதேவி (வட இந்துமகளிர்) மீரா (சண்டிக்குளி) பிரபா (சண்டிக்குளி)

உயரம்பாய்தல்-பிரபா (சண்டிக்குளி), செல்வலட்சுமி (மானிப்பாய் இந்துமகளிர்), இராசரத்தினம் (டிறிபேக)

பரிதிவட்டம் எறிதல்- மேரி சூரியா (நடேஸ்வரா),சரோஜா (மெதடிஸ்ற்), அப்பாத்துரை (உடுவில்)

குண்டெறிதல்- மேரி சூரியா (நடேஸ்வரா), நிர்மலா (சண்டிக்குளி) இந்திராணி (மானிப்பாய் மகளிர்)

100 மீட்டர்- உத்தமராணி (கனகரத்தினம் வித்தியாலயம்), சுந்தராதேவி (வட் இந்து), மீரா (சண்டிக்குளி)

200 மீட்டர்- மீரா (சண்டிக்குளி) சரஸ்வதி (சாவ.இந்து) சுதந்திராதேவி (வட. இந்து)

80 மீட்டர் தடையோட்டம்- துரையப்பா (சண்டிக்குளி), இந்திராணி (மெதடிஸ்ற்),பாலசிங்கம் (உடுவில்)

75 யார் கயிறடித்தல்- விமலா (வட இந்து) ராஜேந்திரா (சண்டிக்குளி), ஐயாத்துரை (டிறிபேக)

4X100 மீட்டர் அஞ்சலோட்டம்- சண்டிக்குளி, வேம்படி, உடுவில்.

### புள்ளிகள் விபரம்

வேம்படி மகளிர் கல்லூரி 179 புள்ளிகள், சண்டிக்குளி 145 புள்ளிகள், உடுவில் 89 புள்ளிகள், மெதடிஸ்ற் 65 1/3 புள்ளிகள் மானிப்பாய் இந்து 58 புள்ளிகள், நடேஸ்வரா 57 புள்ளிகள், வட. இந்து 56 புள்ளிகள், டிறிபேக 39 1/2 புள்ளிகள், கனகரத்தினம் ம. ம வித்தியாலயம் 34 புள்ளிகள், சாவ. இந்துக்கல்லூரி 25 புள்ளிகள், மகாஜனா 19 புள்ளிகள், யாழ். இந்துமகளிர் 13 புள்ளிகள், யாழ். கல்லூரி 11 புள்ளிகள், கொக்குவில் இந்து 3 புள்ளிகள் கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி 1 புள்ளி

### சாம்பியன்கள்

கீழ்ப்பிரிவு- நடராசா (டிறிபேக் கல்லூரி). மத்தியபிரிவு- இரத்தினசிங்கம் (வேம்படி) மேற்பிரிவு- மீரா இராஜசிங்கம் (சண்டிக்குளி), சுதந்திராதேவி (வட் இந்து)


# வரி விளம்பரம்

அப்போதிக்கரி குமார் தந்தியாளர், புகையிரத நிலையத் தலைவர் ஆகிய பரீட்சைக்கு 1-லாம் திகதி தொடக்கம் மீண்டும் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. பி. ஏ., ஜி. ஏ. கியூ வகுப்புகளும் நடைபெறுகின்றன.
**யாழ். டியூட்டோறியல் கல்லூரி,** மலையபிள்ளையார் கோவலடி, நல்லூர், யாழ்ப்பாணம். 679

### விற்பனைக்கு

கோயாளருக்குரிய நன்னக் கூடிய முதிரைக் கதிரை. இவற்றைச் சாய்மனையாகவும், படுக்கையாகவும் உபயோகிக்கலாம் இருக்கையிலும், படுக்கையிலும் மலசலம்கழிக்க வசதிகளும் அமைக்கப்பட்டுள்ளன. கொள்விலை ரூபா 200/- இல. 31. புங்கங்குளம் வீதி, கொழும்புத்துறையில் பார்வையிடலாம். 681

திருநெல்வேலியில் பரமேஸ்வராக் கல்லூரி ஒழுங்கையில் 15 பரப்பு குடியிருப்புக் காணி விற்பனைக்குண்டு. பிரித்துக் கொடுக்கலாம், விபரங்கட்கு து. சண்முகலிங்கம், 193, மானிப்பாய் வீதி, ஓட்டுமடம். 677

### இசை வகுப்புகள்

நெல்லியப்பழை - காசிவிநாயகர் ஆலயத்தில், பா, குரலிசை, வாய்ப்பாட்டு, மிருதங்கம் ஆகிய இசைவகுப்புகள் முறையே இசைமணி வ. செல்லத்துரை, திரு ப, சின்னராசா ஆகியோரை ஆசிரியர்களாகக்கொண்டு, குறைந்தகட்டணத்தில் கற்பிக்கப்படுகின்றன, மாணவ - மாணவிகள் அழைக்கப்படுகின்றனர், 683

### தேவை

எல்லா ஊர்களிலும் எமது ஸ்தாபனத்தில் ஏஜன்டுகளாகக் கடமையாற்றக்கூடியவர்களும், ஸ்தாபன காரியாலயத்தில் லிகிதராகக் கடமைபுரியக்கூடியவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தி ந ஷைனிங் ரூஸ் கோப்பரேசன், 85, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 680

பயிற்றப்பட்ட முகாமையாளர் / லிகிதர் தேவை. வேதனம்: ரூபா 60/- தொடக்கம் 100/- வரை. பின் உயர்வுண்டு. தொடர்பு கடிதமூலம் மட்டும். தலைவர், வகுப்பு தொழிலாளர் சங்கம், சட்டிஸ்டேசன், காங்கேசன்துறை. 678

எமது ஸ்தாபனத்திற்கு ஓடர் எடுப்பதற்கும் பொருளை விநியோகிப்பதற்கும் பிரதிநிதிகள் உடனே தேவை. சம்பளம் ரூ 125.00. பிணைப் பணம் ரூ 600.00. சோப் தயாரிப்பதில் நிபுணர்களும் தேவை தகுந்த சம்பளம் தரப்படும். 28-7-65-முன் 20 சத ஸ்டாம்புடன் ஆண்களும் பெண்களும் விண்ணப்பிக்கலாம். மெரிலான் இன்டஸ்றீஸ் C/o சுழிபுரம் பறாளாய். 684

### வீடு வாடகைக்கு

வண்ணார்பண்ணை கிழக்கில் பலாலி— யாழ்ப்பாண றோட்டுக்கருகாமையில் சகல வசதிகளுமுள்ள ஒரு வீடு 1-8-1965 தொடக்கம் நியாயமான வாடகைக்கு விடப்படவிருக்கிறது. விரும்பினோர் பின்வரும் விலாசத்துடன் தொடர்புகொள்ளவும். த. தம்பித்துரை, வகுத்தலைவிளான், தெல்லிப்பழை 672

### காணி விற்பனைக்கு

நல்லூர், பருத்தித்துறை வீதியில் கோவிலுக்கு சமீபமாக 200 யார் தூரத்தில் கிணற்றுடன் சுமார் 1 1/4 பரப்பு குடியிருப்பு வளவு விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு நல்லூர் 2ம் கட்டைப் பாதையில் உள்ள 38-ம் இலக்கத்தில் நேரில் கலந்துகொள்ளவும். 685

**தொய்வு, க்ஷயம், நீரழிவு, வெள்ளை** முதலிய பல கொடிய வியாதிகள் குணம் படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இலும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்றுயர்ந்துள்ளனர். **வைத்தியர் பூரணானந்தர்,** கைலாசபிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம்.


# கிழக்காசிய மொழிகள் பற்றி ஆராய்ச்சி

லைப்சிக், ஜூலை 21

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசிலே லைபசிக் பல்கலைக்கழகத்தின் கிழக்காசிய வித்தியாபீடத்தின் ஆதரவில் லைபசிக்கில் சர்வதேச மொழிகள் பற்றி ஒரு விவாத அரங்கு நடைபெற்றது தென்கிழக்காசியா, பாசிபிக் இலக்கியம் ரேபல் பெண் அதிபராக பேராசிரியர் ஈ. ஜே. ஏ. ஹெண்டர்சன் (லண்டன்) கிழக்காசியா, தென் கிழக்காசிய மொழிகள் சம்பந்தமான ஆராய்ச்சி கட்டுரையை மகாநாட்டில் வாசித்தார்.

# தமிழ் ஆட்சி மொழியா? இதுதானு கொள்கை?

## எஸ். ஜே. வி. யின் பேச்சுக்கு பீலிக்ஸ் கேட்கும் விளக்கம்

கொழும்பு, புதன்

"ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ்மொழியை நிர்வாக மொழியாகவும் மற்றைய மாகாணங்களிலுள்ள தமிழ் மக்கள் அரசாங்கத்துடன் தமிழ்மொழியில் தொடர்பு கொள்ளவும் சம்மதித்துள்ளதாக மாவிட்டபுரத்தில் வல்லியசிங்கம் அரங்கில் கடந்த மாதம் 6-ம் திகதி திரு செல்வநாயகம் பேசும்போது கூறியுள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழியை நிர்வாகமொழியாக்குவதும் மற்றைய மாகாணங்களில் உள்ள தமிழ் மக்கள் அரசாங்கத்துடன் தமிழ்மொழியில் தொடர்பு கொள்ள சம்மதிப்பதும்தான் அரசாங்கத்தின் கொள்கையா?

ஜனப்பிரதிநிதிகள் சபை ஆகஸ்ட் மாதம் 19-ம் திகதி மீண்டும் கூடும்பொழுது மேற்கண்ட கேள்வியை பிரதமந்திரியிடம் கேட்பதற்கு திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார்.

மேற் கூறப்பட்டவை அரசாங்கத்தின் கொள்கையில்லாவிட்டால், இவ்விஷயங்களில் அரசாங்கத்தின் கொள்கை என்னவென்று திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க கேட்டிருக்கிறார்.

**ராணுவத்தை நீக்கப்படாது**

திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா கீழ்கண்ட கேள்விகளை பாதுகாப்பு அமைச்சரிடம் கேட்கவும் முன்னறிவித்தல் கொடுத்துள்ளார். வடக்கு கிழக்கு மாகாணங்களில் சட்ட விரோத குடியேற்றக்காரர்களை தடுப்பதற்காக இருக்கும் இராணுவத்தினரின் எண்ணிக்கையை குறைக்கமாட்டாரென்றும், இராணுவத்தினரை வாபஸ் பெறமாட்டாரென்றும் வாக்குறுதியளிப்பாரா?

தென் இந்தியாவிலிருந்து வரும் சட்டவிரோத குடியேற்றகாரர்கள், இந்த நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டுக்குத் தொடர்ந்து குந்தகம் விளைவிக்கும் அச்சத்தை ஏற்படுத்தி வருகிறார்கள் என்பதுபற்றி அரசாங்கம் அறியுமா?

சட்டவிரோத குடியேற்றகாரர்களுக்கு எதிராக விழிப்பாக வேண்டுமென்பது அவசியமென்பதை அரசாங்கம் அறியுமா?

---

### "தூக்குமேடையை வரவேற்கிறேன்"

கொழும்பு, புதன்

மகனைக் கொலை செய்த 65 வயதுடைய தந்தைக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது தீர்ப்பளிக்குமுன் பிரதம நீதியரசர் எதிரியைப் பார்த்து ஏதாவது கூற விரும்புகிறீரா? என்று கேட்டதும் மரண தண்டனையை வரவேற்பதாக எதிரி தெரிவித்தார்.

இவ்வழக்கில் அநுராதபுரம் நீதிமன்றத்தில் சுருக்கெழுத்தாளராகக் கடமையாற்றிய 48 வயதுடைய அந்தகாயகா என்பவரை அவரது 65 வயதுள்ள தந்தை அப்புகாமி என்பவர் கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரி இளைப்பாறிய ஒரு பொலிஸ் சார்ஜண்ட் என்பது குறிப்பிடத்தக்கது.

---

### வீட்டுக்கு நெருப்பு..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

5-ம், 10-ம் எதிரிகள்.

வழ: வள்ளத்தில் எவ்வளவு நேரம் இருந்தீர்?- சுமார் ஒன்றரை மணி நேரம் வரை இருந்தேன்.

வழ. 3-ம் 10-ம் எதிரிகள் வீட்டைக் கொளுத்தும்போது 5-ம் எதிரி என்ன செய்தார்?- அவர்களுக்குப்பின்னல் ஓடித்திரிந்தார்.

வழ: இவரது கையில் ஏதாவது இருந்ததா?- கறுப்புநிறமுள்ள இன்ஜெக்டர் பம் போன்ற ஏதோ ஒன்றைக் கையில் வைத்திருந்தார்

வழ: அவரிடம் துப்பாக்கி இருக்கவில்லையா?- துப்பாக்கியைத் தோளில் மாட்டியிருந்தார்,

வழ: அங்கு வந்த ராணுவத்தினர் வேறு யாரிடமாவது துப்பாக்கி இருந்ததா?- ஆம், 4, 5 பேரின் கையில் துப்பாக்கி இருந்தது

வழ: இந்த சம்பவத்திற்கு முன்னும் 3-ம் எதிரியைக் கண்டிருக்கிறீரா?- ஆம்.

வழ: 5-ம், 10-ம் எதிரிகளை?- ஆம், கடற்கரையில் காவல் புரிபவரைக் கண்டிருக்கிறேன்,

வழ: அவர்கள் உம்மை அன்று துரத்திவந்தனரா?- ஆம், 5-ம், 10-ம் எதிரிகள் வள்ளம்வரை துரத்தி வந்து பின்னர் திரும்பிவிட்டனர்,

வழ: ராணுவத்தினர் உம்மையும் உமது தந்தையாரையும் விரட்டினரா?- அவர்கள் விரட்டியபொழுது எல்லோரும் ஓடினோம்.

வழ: முதலாம் வீட்டிற்கு யார் தீ வைத்தனர் என்று தெரியாது?- யார் என்று குறிப்பிட்டுச் சொல்லமுடியாது

வழ: முதலாம் வீடு எரிந்ததனுல்தான் 2-ம் வீடு எரிந்தது என்பது பிழையா?- பிழை மாத்திரமல்ல, அப்படி நடக்கவில்லை

வழ: நீர் ராணுவத்தினரால் தாக்கப்பட்டீரா?- இல்லை,

வழ: அவர்கள் துவக்கினுல் என்ன செய்தனர்?- வளைத்தை நோக்கி சுடுவது போல் துப்பாக்கியைக் குறிவைத்தனர்.

வழ: துப்பாக்கி வெடிச்சத்தம் கேட்டதா?- ஒரு வெடிச்சத்தம் கேட்டது.

வழ: பொலிசாருக்கு வெடிச்சத்தம் பற்றிக் கூறினீரா?- ஆம்

மேல்விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. எதிரிகள் சார்பில் திரு. சி. பாலகிருஷ்ணனின் உதவியுடன் வழக்கறிஞர் திரு. கே. வி. எஸ். சண்முகநாதனும், முடிக்குரிய தரப்பில் திரு ஆர். அபயசூரியாவும் ஆஜரானுர்கள்.

---

### இந்தியபுரட்சி வீரர் தத்தின் பூதவுடல் தகனம்

#### ஞாபகச்சின்னம் எழுப்பமுடிவு

பிரோஸ்பூர், ஜூலை 21: காலஞ்சென்ற புரட்சி வீரர் பட்டுகேஸ்வரதத்தின் பூதவுடல் இன்று சட்லஜ் நதிக்கரையில், சர்தார் பகத்சிங்கின் சமாதிக்கருகில் தகனம் செய்யப்பட்டது. அப்போது பல்லாயிரக்கணக்கான மக்கள் "புரட்சி வாழ்க, தத் வாழ்க" எனக் கோஷமிட்டனர்.

அங்கு காணப்பட்ட நிகழ்ச்சி சுதந்திரப் போராட்ட காலத்தில் நடைபெற்ற சம்பவங்களை நினைவுறுத்துவதாய் இருந்தது என நிருபர்கள் கூறினர்.

தத்தின் சடலத்தின் மீது ஜனுதிபதி, உப ஜனுதிபதி, ராஜ்ய கவர்னர்கள், மத்திய, ராஜ்ய மந்திரிகள் ஆகியோரின் சடலங்கள் வைக்கப்பட்டிருந்தன. பஞ்சாப் கவர்னர், முதன் மந்திரி, மத்திய, ராஜ்ய மந்திரிகள் ஆகியோர் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டனர்.

தீ வைப்பதற்கு முன் பஞ்சாப் ஆயுதப் பொலிசைச் சேர்ந்த 50 வீரர்கள் துப்பாக்கிகளைக் கீழே பிடித்து 15 நிமிஷம் மரியாதை செய்தனர். பின் மும்முறை அவர்கள் வெடி தீர்த்தனர். அப்போது வேத கோஷங்கள் முழங்கிக்கொண்டிருந்தன.

அதற்குமுன் திரு. தத்தின் சடலம் எல்லா புரட்சி வீரர்களின் சமாதிக்கும் எடுத்துச் செல்லப்பட்டது. பகவத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகிய புரட்சி வீரர்களுடன் தத்தும் இணைந்துவிட்டார் என பஞ்சாப் முதன் மந்திரி கூறினுர்.

தத்தின் இறுதி யாத்திரையை முன்னிட்டு இன்று பிரோஸ்பூர் மார்க்கெட்டுகள் மூடப்பட்டிருந்தன. தத்தின் குடும்பத்திற்கு 27,000 ரூபாய் வழங்கவும், மாதம் 250 ரூபாய் வீதம் வழங்கவும் பஞ்சாப் அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. பஞ்சாப் முதல்வர் தமது நிதியிலிருந்து ரூ. 5000 வழங்கவிருக்கிறுர்.

தத்தின் ஞாபகார்த்தமாக சின்னம் ஒன்றை எழுப்ப அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

---

### முனிசிபல் தேர்தலில் சுதந்திரக்கட்சி

கொழும்பு புதன்

சுதந்திரக்கட்சி அனேகமாக எதிர்வரும் கொழும்பு மாநகரசபை தேர்தலில் பல ஸ்தானங்களில் யு. என். பி.க்கெதிராகப் போட்டியிடும் எனத் தெரியவருகிறது.

1962-ம் ஆண்டிலும் பார்க்க எதிர்வரும் தேர்தலில் இடதுசாரிக் கட்சிகள் குறைவான ஸ்தானங்களிலேயே போட்டியிடுவார்கள்.

சென்ற தேர்தலின்போது லங்கா சமசமாஜக்கட்சி 17 ஸ்தானங்களிலும், கம்யூனிஸ்ட் கட்சி 16 ஸ்தானங்களிலும், சுதந்திரக்கட்சி 14 ஸ்தானங்களிலும் போட்டியிட்டன. எல்லாமாக 47 ஸ்தானங்கள் உள்ளன.

கொழும்பிலுள்ள சிறுபான்மை இனத்தவர்கள் இம்முறை இடதுசாரி கட்சிகளுக்கு ஆதரவு கொடுக்கமாட்டார்கள் என்ற காரணத்தினுலேயே இவர்கள் அதிக ஸ்தானங்களில் இம்முறை போட்டியிட முன்வரவில்லை, கடந்த தேர்தலின் போது சிறுபான்மை மக்களின் ஆதரவு இடதுசாரிக்கட்சிகளுக்கு இருந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

தற்பொழுது மாநகரசபையின் எதிர்க்கட்சியில் சமசமாஜ அங்கத்தவர்கள் 8 பேரும், கம்யூனிஸ்ட்கட்சி அங்கத்தவர்கள் 3 பேரும், ஒரு சுயேச்சை அங்கத்தவரும், திருமதி மீனு இரத்தினம் என்பவரும் இருக்கின்றனர்.

---

### காருக்குப் பதில் பணம்பெற்றூர்

பம்பலப்பிட்டி புதன்

பெல்ஸ் கார் சுவீப்பில் முதல் பரிசான பெல்ஸ் காரை பரிசாக பெற்றவரான ஜோன் பீரிஸ், நேற்று காருக்குப் பதிலாக 50,000 ரூபாவை பெறுவதென இறுதி முடிவு செய்தார்.

லொத்தர் சபைத் தலைவர் திரு. சிங்காவிசேகரா அவருக்கு 50,000 ரூபா செக்கை அளித்தார்.

---

### எம். பி.க்கு மந்திரி உறுதி

வவுனியா, புதன்

காணி, நீர்ப்பாசன மின்சார மந்திரி திரு சி பி டி சில்வா அண்மையில் புதுக்குடியிருப்புக்கு விஜயம் செய்திருந்த பொழுது வவுனியா எம் பி திரு ரி சிவசிதம்பரம் மந்திரிக்கு இரு கிணறுகளைக் காட்டினுர்.

ஒவ்வொன்றும் சுமார் 75 அடி ஆழமுள்ள இக்கிணறுகளில் தண்ணீர் இல்லாதது கண்டு மந்திரி ஆச்சரியப்பட்டார். கிணறுகளைச் சுட்டிக்காட்டிய திரு சிவசிதம்பரம் தண்ணீர் பிரச்சினையால் மக்கள் பெரிதும் கஷ்டமுறுகின்றனர் என்றும் குடிநீர் இல்லாது இங்கு மக்கள் அவதிப்படுவதாகவும் தெரிவித்தார்.

"இங்கு நிலவும் வரட்சி பற்றியும் மக்கள் குடிநீரின்றி கஷ்டமுறுவதையும் தாம் கவனித்ததாகவும் கூடியவிரைவில் இங்கு குழாய்க்கிணறு வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதாகவும் மந்திரி சில்வா வாக்குறுதியளித்தார்.

---

### சேரி ஒழிப்புக்கோஷ்டி பின்வாங்கியது

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் றக்கா றோட்டில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டதாகக் கருதப்படும் சில குடிசைகளை அழிப்பதற்காக மேயர், எஞ்ஜினியர் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஆகியோருடன் சென்ற ஒரு கோஷ்டி அங்குள்ளவர் பலர் காட்டிய எதிர்ப்புக்காரணமாக திரும்பவேண்டி நேரிட்டதாம். இச் சம்பவம் நேற்றுக்காலை நிகழ்ந்தது.

---

### கதாப்பிரசங்கம்

வண்ணை சிவன்கோவில் தேவி மகோற்சவத்தில் இன்று மாலை 6 மணி முதல் 7-30 மணி வரை முத்தமிழ்மணி வி எஸ் எஸ். மணிபாகவதர் மகாபாரத விரிவுரையில் "ராஜ சூர்ய யாகம்" என்னும் பொருள் பற்றிக் கதாப் பிரசங்கம் செய்வார்.

---

### எம். பி.யின் பணம் அபேஸ்!

யாழ்ப்பாணம், புதன்

கோப்பாய் எம். பி, திரு. என். கதிரவேற்பிள்ளையும் அவரது நண்பரான வேறு ஒரு வழக்கறிஞரும் மன்னூரில் ஓர் வழக்கிற்காக சென்ற வாரம் ரயிலில் பிரயாணம் செய்தபொழுது, வழக்கு சம்பந்தப்பட்ட பத்திரங்களும், அவரது பிரயாணப்பெட்டியும் பணமும் திருட்டுப்போய்விட்டதாகக் கூறப்படுகிறது.

அனேகமாக இத்திருட்டு பளைக்கும் மதவாச்சிக்குமிடையில் நடந்திருக்கலாமென நம்பப்படுகிறது. வழக்குப்பத்திரங்கள் களவாடப்பட்டதால் இவர்கள் பிரயாணத்தை இடைநடுவே கைவிட்டு வீடு திரும்பினராம்.

---

### போஸ்மாஸ்டர்கள் வெளிநடப்பு

பம்பலப்பிட்டி, புதன்

கொழும்பு பெரிய தபாற் கந்தோரில் உள்ள பதிவு பகுதியில் கடமையாற்றும், போஸ்மாஸ்டர்கள் நேற்றுக்காலை தபால் இலாகா பாதுகாப்பு ஒழுங்கு செய்ய தவறியதை ஆட்சேபித்து வெளிநடப்பு செய்தார்கள்,

நாற்பது பதிவுக் கடிதங்கள் இப்பகுதியிலிருந்து நேற்று காணுமற்போய்விட்டது. இவற்றுடன் காணுமற்போன பதிவுக் கடிதங்களின் தொகை இருநூருக அதிகரித்துள்ளது. இதுசம்பந்தமாக தகுந்த நடவடிக்கை எடுக்கும்வரை வேலை செய்வதில்லையென இப்பகுதி உத்தியோகத்தர் தெரிவித்துள்ளனர்.

---

### தபால் போடுவதில் கஷ்டம்

அச்சுவேலி, புதன்

புலோலி மேற்கு தம்பசிட்டியில் இருந்த உபதபாற்கந்தோரை ஆத்தியடிக்கு மாற்றியதால் தம்பசிட்டி வாசிகள் சுமார் ஒருமைல் தூரம் சென்று தபால் போடவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. இதனுல் கஷ்டமுற்ற அல்லூர் வாசிகள் உடுப்பிட்டி எம் பி திரு எம் சிவசிதம்பரத்திடம் முறையிட்டுள்ளனர்.

---

### ஸ்பென்சர் கொலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தீர்ப்பு நீதியற்றதென்பதை நீதிமன்றம் உணரவேண்டும் என்று எதிரி தெரிவித்தார்,

ஆகஸ்ட் மாதம் 31-ம் திகதி வெலிக்கடைச் சிறைச்சாலையில் எதிரி தூக்கிலிடப்படுவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

நீதியரசர் தீர்ப்பு வழங்கிய பின் "எனது தண்டனை நிறைவேறுமுன்னர் நீதியரசர் இறக்கட்டும்" என்று எதிரி தமிழில் கூறினுர்.

எதிரி சார்பில் வழக்கறிஞர் திரு வி குமாரசாமி திரு ரி பி அமரசிங்காவின் உதவியுடனும், திரு நேயினின் அனுசரணையுடனும் ஆஜரானுர். எதிரிக்காக அரசாங்கத்தால் திரு பிரேமரத்தின நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் திரு ஏ ஏ டி சில்வா ஆஜரானுர்

---

### அம்பாள் உற்சவம்

யாழ்ப்பாணம், வியாழன்

வண்ணார்பண்ணை கிழக்கு குளவடி எச்சாட்டி மகாமாரி அம்பாள் கோவில் மகோற்சவ விழா நேற்று இரவு கோவிலில் கிராமசாந்தியுடன் ஆரம்பமாகியது. இன்று பரணிநட்சத்திரத்தில் துவஜாரோகணமும் 30-7-65 வெள்ளிக்கிழமை இரதோற்சவமும் சனிக்கிழமை பகல் 12 மணி முதல் 2 மணி வரை சாந்தி உற்சவமும் அதன்பின் தீர்த்தோற்சவமும் அன்று இரவு துவஜாரோகணமும் 1-8-65 ஞாயிற்றுக்கிழமை கிராமப்பிரதக்ஷிணமும் நடைபெறும்.

---

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஜூலை மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.